ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்!
அவர் தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள்!
அவர் தம் செயல்களை மக்களினங்கள் அறியச் செய்யுங்கள்.
அவருக்குப் பாடல் பாடுங்கள்;
அவரைப் புகழ்ந்தேத்துங்கள்!
அவர் தம் வியத்தகு செயல்கள்
அனைத்தையும் எடுத்துரையுங்கள்!

திருப்பாடல்கள் 105:11 - 2
149.3

வேதாகமத்து நூல்களுள் திருப்பாடல்கள் மிகவும் விரும்பத்தக்கதொன்றாகும். ஆண்டவர் இயேசுவின் பாடல் புத்தகமாகவும் அமைந்திருந்தது என உங்களுக்குத் தெரியுமா? ஆவர் அனைத்து பாடல்களையும் மனனம் செய்திருந்தார். யூத தொழுகைக் கூடங்களில் ஒன்று கூடியவர்கள் பாடல்கள் பாடுவதில் பழக்கப்பட்டிருந்தனர்.

நாங்கள் உரத்த சத்தமாகப் பாடும் பாடலானது எமது உள்ளத்தினுள்ளும் அமைதியாக எழுப்பப்படுகின்றது என்பதை நாமறிவோம். இவ்வாறாக கடவுளுக்கு பாடலுடன் வேண்டுதல் செய்தல் மிகவும் பொருத்தமான ஒன்றாகும். ஆலய திருவிழாக்களின் போது நாங்கள் செல்லும் வீதி ஊர்வலத்தில் பாடல்கள் பாடுவதன் மூலமாக கடவுளின் புதுமையான செயல்களை ஏனையவர்களுக்கு அறிவிக்கின்றோம்.

ஊர்வலமாக செல்லும்போது நடித்தலுடன் கூடிய வேண்டுதலும் பாவனையில் இருந்து வந்தது. பாடல் விண்ணப்பம் போன்று நடிப்பு விண்ணப்பமும் கடவுளால் விருப்புடன் ஏற்றுக் கொள்ளப்படும் ஒன்றாகும். நாமும் எமது உள்ளத்தின் உணர்ச்சிகளை பாடல், நடிப்புக் கூடாக வெளிப்படுத்த முடியும்.

ஒரு முறை அரசன் தாவீது தனது அரச உடைகளை அகற்றி விட்டு எளிமையான உடைகளை அணிந்து கடவுளின் முன்னால் தன்னுடைய முழு பலத்தாலும் நடனமாடினான். அவன் இஸ்ரேல் அரசனாக இருந்த போதும் கடவுளின் முன்னால் தன்னை எளிமையானவன் என்பதை எடுத்துக் காட்டினான்.

எமது நாட்டிலுள்ள நாட்டியக் கலைகளை உபயோகித்து அவருடைய மகிமையை வெளிப்படுத்த முடியும்.

நாமும் எமது நாட்டுக்குப் பொருத்தமான நடனங்களை திருவிழாகடகளின் போது கடவுளுக்கு நடன விண்ணப்பம் செய்ய முற்படுவோம். சிலவேளைகளில் நீங்கள் இவ்வாறான நிகழ்ச்சிகளில் பங்குபற்றி இருக்கலாம். நடன வேண்டுதலைப் போன்று நடன விண்ணப்பங்களுக்கு வார்த்தைகள் தேவையில்லை. ஊமையரும், செவிடர்களும் கடவுளைத் துதிப்பதற்காக நடன விண்ணங்பகளை ஏறெடுக்கின்றனர். நடனம், அபிநயங்களை இவ்வாறாக உபயோகித்தல் எமது மனதைக் கவர்ந்ததொன்றாகும்.

இவ்வாறாக நடன விண்ணப்பம் செய்பவர்களைப் போன்று, பார்த்துக் கொண்டிருக்கும் நாங்களும் புனித வணக்க சூழலுக்கு மிக மகிழ்வுடன் கலந்து கொள்வோம்.

செயற்பாடு

உங்களுக்குத் தெரிந்த ஒரு பாடல் அல்லது வேண்டுதல் ஒன்றை அபிநயமாக அல்லது நடனமாக செய்து காட்டவும்.